# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 34/2021 நாள்: 30.09.2021

### 37 மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள், 2021-க்கான தயார்நிலை ஏற்பாடுகள் குறித்த ஆய்வு

சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர். வெ. பழனிகுமார் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் ஊரக சாதாரண/தற்செயல் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற உள்ள 37 மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள், 2021-க்கான தயார்நிலை ஏற்பாடுகள் குறித்து காணொளி காட்சி (Video Conferencing) வழியாக 29.09.2021 அன்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ.சுந்தரவல்லி. இ.ஆ,ப,, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் திரு. பிரவீன்.P.நாயர், இ.ஆ.ப., காவல் துணைத் தலைவர் (நிர்வாகம்) திரு எஸ். பிரபாகரன், இ.கா.ப., காவல் உதவி தலைவர் (தலைமையிடம்) முனைவர் எம். துரை, இ.கா.ப., கொள்ளை நோய் தடுப்பு இணை இயக்குநர் மருத்துவர் ப.சம்பத், முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு க. அருண்மணி, முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி கு. தனலட்சுமி மற்றும் மாநில தேர்தல் ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்காணொளி ஆய்வுக்கூட்டத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தலை அமைதியாக நடத்துவதற்கு கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

- வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் மையங்களில் கோவிட்-19 தொற்று பரவலை தடுக்க கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்

..2..

- அனைத்து வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி செலுத்தப்பட்டதை உறுதி செய்தல்.

- வாக்குச்சாவடிச்சீட்டு வாக்காளர்களுக்கு விநியோகம் செய்தல்

- வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்

- மண்டல அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் - மாதிரி பயணத்திட்டம்.

- மாதிரி நன்னடத்தை விதிகளை தவறாது கடைப்பிடித்தல் - விதிமீறல் இனங்கள் குறித்த அறிக்கை.

- பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் மதுபானம் குறித்த அறிக்கை.

- பதற்றமான வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள், வீடியோ பதிவுகள் மற்றும் தேர்தல் நுண்மேற்பார்வையாளர் பணிகள் குறித்த விவரங்கள்.

- வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணுகை மையங்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள்.

- வாக்கு எண்ணுகை மையத்தில் சிசி டிவி அமைத்தல்.

- வாக்கு எண்ணுகை மையத்தில் பாதுகாப்பு அறைக்கு சிசி டிவி அமைத்தல்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

30/9/2021

மக்கள் தொடர்பு அலுவலர்